# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1924/8 - 2015 ජූලි මස 20 වැනි සඳුදා - 2015.07.20

*1924/8 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 5/2011.*

**2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் சட்டம்**

*2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 89(2)(இ) ஆம் பிரிவின் கீழ் நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*கபீர் ஹாசீம்,*
*நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.*

*பத்தரமுல்லை,*
*2015, யூலை 17.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தேசிய பொதுவழிகள் (பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் -

(அ) 2011 ஆம் ஆண்டின் நவெம்பர் மாதம் 8 ஆந் தேதிய 1731/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய பொதுவழிகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட “தெற்கு பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெருவிற்கும்”;

(ஆ) 2014 ஆம் ஆண்டின் பெப்புருவரி மாதம் 19 ஆந் தேதிய 1850/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய பொதுவழிகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட “காலி-மாத்தறை பாவனையாளர் கட்டண தேசிய பெருந் தெருவிற்கும்”; அத்துடன்

(இ) 2015 ஆம் ஆண்டின் யூலை மாதம் 8 ஆந் தேதிய 1922/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய பொதுவழிகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட “வெளிச் சுற்றுவட்ட பாவனையாளர் கட்டண தேசிய பெருந்தெருவின் கொட்டாவ – கடவத்தைப் பகுதிக்கும்”,

ஏற்புடையதாதல் வேண்டும்.

3. (1) மேற்கூறப்பட்ட பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவில் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு வாகனத்தினதும் சாரதியிடமிருந்து இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் அ என்பதில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வீதப்படி அத்தகைய சாரதியினால் அத்தகைய பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவின் பாவனை தொடர்பில் கட்டணமொன்று அறவிடப்படுதல் வேண்டும்.

(2) கட்டணமானது பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவின் முழுத்தூரம் அல்லது அதன் பாகம் தொடர்பில் விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

4. (1) ஏதேனும் இடைமாற்றுப் பாதையிலிருந்து பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவினுள் பிரவேசிக்கும் வாகனமொன்றின் சாரதி ஒருவர் அத்தகைய இடைமாற்றுப் பாதையில் கடமையிலிருக்கும் பணப் பொறுப்பாளரிடமிருந்து, அத்தகைய பெருந்தெருவில் தொடர்ந்து செல்வதற்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் நுழைவுச்சீட்டொன்றைப் பெறுதல் வேண்டும்.

(2) பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவில் சென்று கொண்டிருக்கும் வாகனமொன்றின் சாரதி அத்தகைய பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவிலிருந்து வெளியேறும் நோக்கத்திற்காக இடைமாற்றுப் பாதையொன்றின் நுழைவாயில் கதவில் வந்து சேரும்போது, அவர் எந்த இடைமாற்றுப் பாதையின் ஊடாக உட்பிரவேசித்தாரோ அந்த இடைமாற்றுப் பாதையில் பெற்றுக் கொண்ட நுழைவுச் சீட்டைப் பணப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்;

(3) பணப் பொறுப்பாளர் செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகையை சாரதிக்கு அறிவித்தல் வேண்டும். அதற்கிணங்க சாரதி அத்தகைய இடைமாற்றுப்பாதையின் ஊடாகக் கடந்து செல்ல அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் அத்தகைய தொகையைச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கொடுப்பனவு தொடர்பிலான பற்றுச்சீட்டொன்றைப் பணப் பொறுப்பாளர் வழங்குதலும் வேண்டும்.

5. (1) ஒவ்வொரு வாகனத்தின் சாரதி ஒருவர், அவர் எந்த இடைமாற்றுப் பாதையினூடாக அத்தகைய பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவிலிருந்து வெளியேற முன்னுகின்றாரோ அந்த இடைமாற்றுப் பாதையை அடையும் வரைக்கும் 4 (1) ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட நுழைவுச் சீட்டைத் தமது உடைமையில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

(2) சாரதியானவர், பணப் பொறுப்பாளருக்கு நுழைவுச்சீட்டை ஒப்படைப்பதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, அவர் மிகக்கூடிய தொலைவிலுள்ள நுழைவாயிலிருந்து வெளியேறிய இடம் வரைக்குமான பாவனையாளர் கட்டணத் தேசிய பெருந்தெருவின் முழுத் தூரத்தையும் பயணித்துள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் அ இல் குறித்துரைக்கப்பட்ட வீதங்களிலான கட்டணமொன்று அவரிடமிருந்து அறவிடப்படுதலும் வேண்டும்.

6. (1) (இதனகத்துப்பின்னர் “அதிகாரசபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருக்கள் வழியாக தேவைப்படுத்தப்பட்ட இடங்களில் போதிய எண்ணிக்கையினதான நுழைவாயில் கதவுகள் அமைக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு வழியாக அவ்வாறு அமைக்கப்பட்ட நுழைவாயில் கதவுகள் அதிகாரசபையால் சொந்தமாக வைத்திருக்கப்படுதலும் தொழிற்படுத்தப்படுதலும் மற்றும் பேணப்படுதலும் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு நுழைவாயில் கதவிலும் பணப் பொறுப்பாளர் ஒருவர் அமர்த்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(3) பணப் பொறுப்பாளர் (2) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட நுழைவாயில் கதவு ஒவ்வொன்றிலும், அத்தகைய பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவைப் பயன்படுத்துகின்ற சாரதி ஒவ்வொருவரிடமிருந்தும் இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் அ என்பதில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தொகையிலான பாவனையாளர் கட்டணத்தைச் சேகரிப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்:

ஆயினும், இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்ட, அத்தகைய கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்ட வகுதியொன்றினைச் சேர்ந்த வாகனமொன்றைச் செலுத்துகின்ற சாரதி ஒருவருக்கு ஏற்புடையனவாதலாகாது.

7. பணப் பொறுப்பாளர் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் அன்றைய தினத்தின் கட்டணங்களின் சேகரிப்பை அதிகாரசபையால் அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் கையளித்தலும், அத்தகைய தொகை தொடர்பில் பற்றுச்சீட்டு ஒன்றைப் பெறுதலும் வேண்டும்.

8. பாவனையாளர் கட்டணங்களாக அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் அதிகாரசபையின் நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இந்த ஒழுங்குவிதிகள் ஏற்புடைத்தாகும் பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெருவை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் பேணுவதற்குமான நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக –

"பணப் பொறுப்பாளர்" என்பது இடைமாற்றுப் பாதையொன்றின் நுழைவாயில் கதவில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் என்று பொருளாகும்;

"பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெருக்கள்" என்பது, கொட்டாவவிலிருந்து (0.0 km) பின்னதுவ (95.275km) வரையான தெற்கு பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு, பின்னதுவவிலிருந்து (95.275km) கொடகம (124.800km) வரையிலான காலி – மாத்தறை பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு மற்றும் வெளிப்புற சுற்றுவட்ட பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெருவின் கொட்டாவ - (0.000 km) - கடவத்தை (19.245 km) பகுதி என்பவற்றை உள்ளடக்குகின்றது.

10. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற வாகனமொன்றின் சாரதி தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது -

(அ) முதலாவது தவறொன்றின் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ; அத்துடன்

(ஆ) இரண்டாவது அல்லது அடுத்துறும் தவறொன்றின் விடயத்தில் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும்

ஆளாதலும் வேண்டும்.

11. 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் தேதிய 1852/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் (பாவனையாளர் கட்டணம்) ஒழுங்குவிதிகள் அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

*(ஒழுங்குவிதிகள் 3 மற்றும் 6)*

# அட்டவணை





## பாகம் அ

**தெற்கு பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு (தெற்கு கடுகதிப்பாதை), காலி-மாத்தறை பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு மற்றும் வெளிச் சுற்றுவட்ட பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெருவின் கொட்டாவ - கடவத்தை பகுதி**

வகை 1 ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா)

| இடைமாற்றுப் பாதைகளுக்கிடையிலான தூரங்கள் | 9.35 கி.மீ | 4.8 கி.மீ | 5.1 கி.மீ | 6 கி.மீ | 8 கி.மீ | 21 கி.மீ | 11 கி.மீ | 22 கி.மீ | 12 கி.மீ | 16 கி.மீ | 12.4 கி.மீ | 7.9 கி.மீ | 9.9 கி.மீ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடவத்தை (வெளியே C 2) | கடுவலை (வெளியே C 3) | அதுருகிரிய (வெளியே C 5) | கொட்டாவ (வெளியே S 1) | கஹதுடுவ (வெளியே S 2) | கெலனிகம (வெளியே S 3) | தொடங்கொட (வெளியே S 4) | வெலிபென்ன (வெளியே S 5) | குறுந்துகஹஹட்டபம (வெளியே S 6) | பத்தேகம (வெளியே S 7) | பின்னதூவ (வெளியே S 8 ) | இமதூவ (வெளியே S 9) | கொக்மாதூவ (வெளியே S 10) | கொடகம (வெளியே S 11) |
| கடுவலை | 100 | | | | | | | | | | | | |
| அத்துருகிரிய | 150 | 100 | | | | | | | | | | | |
| கொட்டாவ | 150 | 100 | 100 | | | | | | | | | | |
| கஹதுடுவ | 200 | 150 | 150 | 100 | | | | | | | | | |
| கெலனிகம | 250 | 200 | 200 | 150 | 100 | | | | | | | | |
| தொடங்கொட | 300 | 250 | 250 | 200 | 150 | 150 | | | | | | | |
| வெலிபென்ன | 350 | 300 | 300 | 250 | 200 | 200 | 100 | | | | | | |
| குறுந்துகஹஹட்டபம | 400 | 350 | 350 | 300 | 250 | 250 | 150 | 150 | | | | | |
| பத்தேகம | 450 | 400 | 400 | 350 | 300 | 250 | 200 | 200 | 100 | | | | |
| பின்னதூவ | 500 | 450 | 450 | 400 | 350 | 300 | 250 | 250 | 150 | 150 | | | |
| இமதூவ | 550 | 500 | 500 | 450 | 400 | 350 | 300 | 300 | 250 | 200 | 100 | | |
| கொக்மாதூவ | 600 | 550 | 550 | 500 | 450 | 400 | 350 | 300 | 250 | 200 | 150 | 100 | |
| கொடகம | 650 | 600 | 600 | 550 | 500 | 450 | 400 | 350 | 300 | 250 | 200 | 150 | 100 |

வகை 1 ஐச் சேர்ந்த வாகனங்கள் பின்வருவன வற்றை உள்ளடக்கும்

| | |
|---|---|
| **கார்கள்** | |
|  | எல்லா வகையான கார்கள் |
|  | எல்லா வகையான ஜீப்புக்கள் |
|  | எல்லா வகையான சலூன் ஸ்ரேசன் வகன்கள் |
| **இரட்டை நோக்க வாகனங்கள்** | |
|  | எல்லா கப்புகள் (ஒற்றை மற்றும் இரட்டை) |
|  | 9 ஆசனங்கள் வரையான எல்லாப் பயணிகள் வான்கள் |
|  | வாகனத்தின் மொத்த எடை 3,500 கி. கி. வரையிலான எல்லா வான்கள் மற்றும் றக்குகள் |
| **பாரமற்ற மோட்டார் லொறி** | |
|  | 2 அச்சுக்கள் மற்றும் 4 சக்கரங்களைக் கொண்ட லொறிகள் மற்றும் றக்குகள் |

## அட்டவணை *(தொடர்ச்சி)*

**தெற்கு பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு (தெற்கு கடுகதிப்பாதை), காலி-மாத்தறை பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு மற்றும் வெளிச் சுற்றுவட்டப் பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெருவின் கொட்டாவ - கடவத்தைப் பகுதி**



வகுதி 2 ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா)

*9.35 கி.மீ 4.8 கி.மீ 5.1 கி.மீ. 6 கி.மீ 8 கி.மீ 21 கி.மீ 11 கி.மீ 22 கி.மீ 12. கி.மீ 16 கி.மீ 12.4 கி.மீ 7.9 கி.மீ 9.9 கி.மீ*

இரட்டைமாற்றுப்பாதைகளுக்கிடையிலான தூரங்கள்

| | கடவத்தை (வெளியே C 2) | கடுவலை (வெளியே C 3) | அதுருகிரிய (வெளியே C 5) | கொட்டாவ (வெளியே S 1) | கஹதுடுவ (வெளியே S 2) | கெலனிகம (வெளியே S 3) | தொடங்கொட (வெளியே S 4) | வெலிபென்ன (வெளியே S 5) | குறுந்துகஹஹட்டபம (வெளியே S 6) | பத்தேகம (வெளியே S 7) | பின்னதூவ (வெளியே S 8 ) | இமதூவ (வெளியே S 9) | கொக்மாதூவ (வெளியே S 10) | கொடகம (வெளியே S 11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கடுவலை | 150 | | | | | | | | | | | | | |
| அத்துருகிரிய | 150 | 100 | | | | | | | | | | | | |
| கொட்டாவ | 200 | 150 | 150 | | | | | | | | | | | |
| கஹதுடுவ | 250 | 200 | 200 | 150 | | | | | | | | | | |
| கெலனிகம | 300 | 250 | 250 | 200 | 150 | | | | | | | | | |
| தொடங்கொட | 400 | 350 | 350 | 300 | 250 | 200 | | | | | | | | |
| வெலிபென்ன | 500 | 450 | 400 | 350 | 300 | 250 | 200 | | | | | | | |
| குறுந்துகஹஹட்டபம | 600 | 550 | 550 | 500 | 450 | 400 | 300 | 250 | | | | | | |
| பத்தேகம | 700 | 650 | 650 | 600 | 550 | 500 | 350 | 300 | 200 | | | | | |
| பின்னதூவ | 800 | 750 | 750 | 700 | 650 | 600 | 450 | 400 | 250 | 200 | | | | |
| இமதூவ | 900 | 850 | 850 | 800 | 750 | 700 | 650 | 550 | 400 | 300 | 150 | | | |
| கொக்மாதூவ | 950 | 900 | 900 | 850 | 800 | 750 | 700 | 600 | 450 | 350 | 200 | 150 | | |
| கொடகம | 1000 | 950 | 950 | 900 | 850 | 800 | 750 | 700 | 500 | 400 | 300 | 200 | 150 | |

வகை 2 ஐச் சேர்ந்த வாகனங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்

| பாரமற்ற மோட்டார் கோச்சுகள் | |
|---|---|
|  | *9 ஆசனங்களுக்கு அதிகமான ஆசனங்களைக் கொண்ட பயணிகள் வான்* |
|  | *9 இற்குக் கூடுதலானதும் 33 இற்குக் குறைவானதுமான பயணிகள் ஆசனங்களைக் கொண்ட வசுக்கள்* |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**தெற்குப் பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு (தெற்கு கடுகதிப்பாதை), காலி-மாத்தறை பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு மற்றும் வெளிச் சுற்றுவட்ட பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெருவின் கொட்டாவ - கடவத்தை பகுதி**

வகை 3 ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா)

| இடைமாற்றப்பாதைகளுக்கிடையிலான தூரங்கள் | 9.35 கி.மீ | 4.8 கி.மீ | 5.1 கி.மீ. | 6 கி.மீ | 8 கி.மீ | 21 கி.மீ | 11 கி.மீ | 22 கி.மீ | 12 கி.மீ | 16 கி.மீ | 12.4 கி.மீ | 7.9 கி.மீ | 9.9 கி.மீ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடவத்தை (வெளியே C 2) | கடுவலை (வெளியே C 3) | அதுருகிரிய (வெளியே C 5) | கொட்டாவ (வெளியே S 1) | கஹதுடுவ (வெளியே S 2) | கெலனிகம (வெளியே S 3) | தொடங்கொட (வெளியே S 4) | வெலிபென்ன (வெளியே S 5) | குறுந்துகஹஹட்டபம (வெளியே S 6) | பத்தேகம (வெளியே S 7) | பின்னதூவ (வெளியே S 8 ) | இமதூவ (வெளியே S 9) | கொக்மாதூவ (வெளியே S 10) | கொடகம (வெளியே S 11) |
| கடுவலை | 200 | | | | | | | | | | | | | |
| அத்துருகிரிய | 250 | 200 | | | | | | | | | | | | |
| கொட்டாவ | 300 | 250 | 200 | | | | | | | | | | | |
| கஹதுடுவ | 350 | 300 | 250 | 200 | | | | | | | | | | |
| கெலனிகம | 450 | 400 | 350 | 250 | 200 | | | | | | | | | |
| தொடங்கொட | 650 | 600 | 550 | 450 | 400 | 300 | | | | | | | | |
| வெலிபென்ன | 800 | 750 | 650 | 600 | 500 | 450 | 250 | | | | | | | |
| குறுந்துகஹஹட்டபம | 1050 | 1000 | 950 | 850 | 800 | 700 | 450 | 300 | | | | | | |
| பத்தேகம | 1200 | 1150 | 1100 | 1000 | 950 | 850 | 600 | 450 | 250 | | | | | |
| பின்னதூவ | 1400 | 1350 | 1250 | 1200 | 1150 | 1050 | 750 | 650 | 350 | 250 | | | | |
| இமதூவ | 1550 | 1500 | 1400 | 1350 | 1300 | 1200 | 900 | 800 | 500 | 350 | 200 | | | |
| கொக்மாதூவ | 1650 | 1600 | 1500 | 1400 | 1350 | 1250 | 1000 | 850 | 600 | 450 | 250 | 200 | | |
| கொடகம | 1750 | 1700 | 1600 | 1550 | 1500 | 1400 | 1150 | 1000 | 750 | 600 | 400 | 250 | 200 | |


வகை 3 ஐச் சேர்ந்த வாகனங்கள் பின்வருவன வற்றை உள்ளடக்கும்

**மோட்டார் கோச்சு**




33 இற்கு மேற்பட்ட ஆசனங்களுடைய எல்லா வசுக்கள்

**பாரமற்ற மோட்டார் லொறி**



2 அச்சுக்கள் மற்றும் 6 சக்கரங்கள் கொண்ட லொறிகள் மற்றும் றக்குகள்

**மோட்டார் லொறி**



மொத்த வாகன எடை 17,000 கி. கி. இற்கு மேற்பட்ட எடையான லொறிகள் மற்றும் றக்குகள் (3 அச்சு றக்குகள் வரை)

**அட்டவணை** *(தொடர்ச்சி)*



**தெற்குப் பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு (தெற்கு கடுகதிப்பாதை), காலி-மாத்தறை பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு மற்றும் வெளிச் சுற்றுவட்ட பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெருவின் கொட்டாவ - கடவத்தை பகுதி**

வகை 4 ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா)

இரட்டைமாற்றப்பாதைகளுக்கிடையிலான தூரங்கள்

| | 9.35 கி.மீ | 4.8 கி.மீ | 5.1 கி.மீ | 6 கி.மீ | 8 கி.மீ | 21 கி.மீ | 11 கி.மீ | 22. கி. மீ | 12 கி.மீ | 16 கி.மீ | 12.4 கி. மீ | 7.9 கி. மீ | 9.9 கி.மீ | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடவத்தை (வெளியே C 2) | கடுவலை (வெளியே C 3) | அதுருகிரிய (வெளியே C 5) | கொட்டாவ (வெளியே S 1) | கஹதுடுவ (வெளியே S 2) | கெலனிகம (வெளியே S 3) | தொடங்கொட (வெளியே S 4) | வெலிபென்ன (வெளியே S 5) | குறுந்துகஹஹட்டபம (வெளியே S 6) | பத்தேகம (வெளியே S 7) | பின்னதூவ (வெளியே S 8 ) | இமதூவ (வெளியே S 9) | கொக்மாதூவ (வெளியே S 10) | கொடகம (வெளியே S 11) |
| கடுவலை | 250 | | | | | | | | | | | | | |
| அதுருகிரிய | 300 | 250 | | | | | | | | | | | | |
| கொட்டாவ | 350 | 300 | 250 | | | | | | | | | | | |
| கஹதுடுவ | 450 | 350 | 350 | 250 | | | | | | | | | | |
| கெலனிகம | 600 | 450 | 350 | 300 | 250 | | | | | | | | | |
| தொடங்கொட | 950 | 800 | 700 | 650 | 500 | 400 | | | | | | | | |
| வெலிபென்ன | 1150 | 1000 | 900 | 850 | 700 | 600 | 250 | | | | | | | |
| குறுந்துகஹஹட்டபம | 1550 | 1400 | 1250 | 1200 | 1000 | 950 | 600 | 400 | | | | | | |
| பத்தேகம | 1750 | 1600 | 1400 | 1400 | 1350 | 1200 | 800 | 600 | 300 | | | | | |
| பின்னதூவ | 2000 | 1800 | 1600 | 1550 | 1500 | 1400 | 1000 | 800 | 500 | 300 | | | | |
| இமதூவ | 2200 | 1900 | 1800 | 1700 | 1600 | 1500 | 1100 | 1000 | 650 | 450 | 250 | | | |
| கொக்மாதூவ | 2300 | 2000 | 1900 | 1800 | 1700 | 1600 | 1200 | 1100 | 750 | 550 | 350 | 250 | | |
| கொடகம | 2500 | 2100 | 2000 | 1900 | 1800 | 1700 | 1400 | 1200 | 1000 | 750 | 500 | 350 | 250 | |

*வகை 4 ஐச் சேர்ந்த வாகனங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்*

| ***கனரக மோட்டார் கோச்சு*** | |
|---|---|
|  | *கூட்டாக இணைக்கப்பட்ட வசுக்கள்* |
| ***கனரக மோட்டார் லொறி*** | |
|  | *4 அல்லது அதற்கு மேற்பட்ட அச்சுக்களைக்கொண்ட எல்லா வாகனங்களும்* |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*(ஒழுங்குவிதிகள் 6)*

**பாகம் ஆ**

**தெற்குப் பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு (தெற்கு கடுகதிப்பாதை), காலி - மாத்தறை பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு மற்றும் வெளிப்புற சுற்றுவட்டப் பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெருவின் கொட்டாவ - கடவத்தைப் பகுதி என்பவற்றிற்கான பாவனையாளர் கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட வாகனங்களை விலக்களித்தல்**

1. ஏதேனும் கொடுக்கப்பட்ட நேரத்தில் சனாதிபதி தொடரணியின் பாகமாக அமைந்துள்ள எல்லா வாகனங்களும் பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு வழியாக செலுத்தப்படும் வரை அத்தகைய வாகனம்.

2. ஏதேனும் கொடுக்கப்பட்ட நேரத்தில் பிரதம அமைச்சரின் தொடரணியின் பாகமாக அமைந்துள்ள எல்லா வாகனங்களும் பாவனையாளர் கட்டணத் தேசியப் பெருந்தெரு வழியாக செலுத்தப்படும் வரை அத்தகைய வாகனம்.

8 - 45

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.